

# <u>வரதகுரு ஸ்ரீ நடாதூர் அம்மாள்</u>

வந்தேகுரு பரம்பராம்

அஸ்மத்குருப்யோ நமஹ

**"புஷ்பேஷு ஜாதி, புருஷேஷு விஷ்ணு**

**நாரீஷு ரம்பா, நகரேஷு காஞ்சி! “**

என்று பாடியுள்ளான் கவி காளிதாசன். முத்திதரும் நகர் ஏழில் முக்கியமானது கச்சி. அதிலும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு 'பெருமாள் கோவில்' எனும் இந்த க்ஷேத்ரம் மிக முக்கியமான ஒன்று. ஹஸ்திகிரி (அத்திகிரி), ஸத்யவிரத க்ஷேத்ரம் என்று ஸ்ரீ வைஷ்ணவத்தில் பிரசித்தம். ஆசார்யன் ஸ்வாமி தேசிகன் 'ஹஸ்திகிரி மஹாத்ம்யம்' (அத்திகிரி மஹாத்மீயம்) என்ற க்ரந்தத்தை அருளியுள்ளார். எம்பெருமானை நேரில் சேவிக்க வேண்டும் என்ற சதுர்முகன் ப்ரஹ்மாவின் அதீத ஆசையின் பலனாக அவர் செய்த யாகவேதியில் இருந்து அபரிமிதமான தேஜஸுடன் பேரருளாளன் எனும் மாநிதி ஆவிர்பவித்தார். ஸ்வாமி தேசிகன் பாடியது போல்'கருதவரந் தருதெய்வ பெருமாள் வந்தார்' ப்ரஹ்மதேவன் கேட்ட வரம்படி இந்த காஞ்சி க்ஷேத்திரத்திலேயே 'வரம் தா' என நாடியவர்க்கு வரம் தரும் வரதனாக இன்றும் சேவை சாதிக்கிறார்.

இவ்வளவு பெருமைகள் கொண்ட காஞ்சி பல ஆசார்ய பௌமர்களை, மஹான்களை நம் ஸம்ப்ரதாயத்திற்க்கு அளித்துள்ளது. அப்படிப்பட்ட ஒரு மஹான் ஆசார்யன் 'நடாதூர் அம்மாள்'.

'நடம்' என்றால் தாமரை. எம்பெருமானின் திருவடி தாமரையையே மட்டுமே தியானித்து கொண்டிருப்பவர்கள் வாழும் ஊராதலால், நடாதூர் என ஆயிற்று.



ஸ்ரீ நடாதூர் அம்மாள்

ஸ்ரீபாஷ்யகாரர் இராமனுஜரின் முக்கிய சிஷ்யர்களில் ஒருவரான ஸ்ரீ நடாதூர் ஆழ்வானுடைய திருபேரர். ஸ்ரீ நடாதூராழ்வான் எம்பெருமானாரால் ஸ்ரீபாஷ்யஸிம்மாஸனம் பரிசளிக்கபட்டு கௌரவிக்கபட்டவர். 74 ஸம்மாசனாதிபதிகளில் முக்கியமானவர்.

ஸ்ரீ நடாதூர் அம்மாளின் இயற் பெயர் ஸ்ரீவத்ஸ வரதன் மனஎன்பது. சித்திரை மாதம் கூடிய சித்திரை திருநட்சத்திரத்தில் ஸ்ரீவத்ஸ கோத்ரத்தில் நடாதூரில் திரு அவதாரம். காஞ்சிபுரத்தில் வாழ்ந்து வந்தார். இம்மஹான் காஞ்சிபுரத்தில் பேரருளாளன் சந்நிதியில், வரதன் ஆறு வார்த்தை பேசிய கச்சி வாய்த்தான் மண்டபத்தில் உடையவர் ஸ்ரீ ராமனுஜர் அருளிய ஸ்ரீபாஷ்யத்தை தன் சிஷ்யகோடிகளுக்கு வியாக்கியானதுடன் விளக்கி வந்தார்.

ஒருநாள் பெருமாள் வரதனுக்குச் சூடானப் பாலை அர்ச்சகர் ஸமர்பித்ததை பார்த்த இவர் பதறிப் போய், பாலைத் தான் வாங்கி அதை பொறுமையுடன் ஆறவைத்து, ஒரு தாய் தன் குழந்தைக்கு கொடுப்பது போல் ஸமர்ப்பித்தார். இவ்வளவு வாத்சல்யம்,பொங்கும் பறிவுடன் பாலமுது அளித்ததை ரசித்து திருவுள்ளம் மகிழ்ந்த எம்பெருமான் ஸ்ரீ வரதராஜன் "அம்மா" என்று அவரை ப்ரீத்தியுடன் அழைத்தார். அன்று முதல் அவர் அம்மாள்' அல்லது வாத்ஸ்ய வரதகுரு என அழைக்கப்பட்டார். பின்னாளில் அவர் பிறந்த ஊரான' நடாதூர்' இணைத்து "நடாதூர் அம்மாள்" என்று அனைவரும் அழைக்கத் தொடங்கினர்.

அம்மாள் தன் பாட்டனாரிடம் ஸ்ரீபாஷ்யம் கற்றுக் கொள்ள ஆசைப்பட்டார். பாட்டனாருக்கு வயது முதிர்ந்த காரணத்தால் அவரை எங்களாழ்வானிடம் சென்று கற்றுக் கொள்ளும்படி அறிவுறுத்தினார். அம்மாள் ஸ்ரீபாஷ்யம் கற்றுக் கொள்ள எங்களாழ்வான் திருமாளிகை (இல்லம்) அடைந்து கதவைத் தட்டினார். எங்களாழ்வான் யார் அது என்று கேட்க, அதற்கு அவர் “நான் வரதன்” என்று சொல்ல, எங்களாழ்வான் “நான்” செத்தவுடன் திரும்பி வா என்று அனுப்பிவிட்டார் . அம்மாள் இல்லம் திரும்பிப் பாட்டனாரிடம் இதைப் பற்றி வினவினார். அதற்குப் பாட்டனார் நடாதூராழ்வான் சொன்னார் “நாம் எப்பொழுதும் அறிமுகம் செய்யும்பொழுது அடியேன் (தாஸன்) என்று பணிவுடன் கூறவேண்டும். 'நான்' , 'எனது' என்ற சொல்லை உபயோகப்படுத்தக் கூடாது. அதுவே அஹங்காரத்தின் காரணமாகும்” . இந்த ஸம்ப்ரதாயத்தைப் புரிந்து கொண்டு அம்மாள் மறுபடியும் எங்களாழ்வான் திருமாளிகைக்குச் சென்று கதவைத் தட்டினார். இந்த முறை எங்களாழ்வான் யார் வந்திருப்பது என்று கேட்க, அம்மாள் “அடியேன் வரதன் வந்திருக்கிறேன்” என்று பதில் கூறினார். எங்களாழ்வான் இவரது பணிவில் மகிழ்ந்து, இவரை

மனமுவந்து வரவேற்று சிஷ்யராக ஏற்றுக் கொண்டு அவர்க்கு எல்லா சிறந்த வைஷ்ணவ ஸம்ப்ரதாயக் கொள்கைகளையும் கற்பித்தார். நடாதூரம்மாளின் ஆசார்யனாக இருந்து அவரைச் சிறந்த ஞானஸ்தனாக ஆக்கியதால் எங்களாழ்வான் “அம்மாள் ஆசார்யன்” என்று போற்றப்படுகிறார்.

அம்மாளின் பிரதான சிஷ்யர் ஸ்ருதப்ரகாசிகா பட்டர் (ஸுதர்சன ஸூரி – வேத வ்யாஸ பட்டரின் பேரன்) ஆவார். இவர் அம்மாளிடமிருந்து ஸ்ரீபாஷ்யத்தைக் கற்ற பிறகு ஸ்ருத ப்ரகாஸிகை என்னும் புகழ் பெற்ற விளக்கவுரையையும், வேதார்த்த ஸங்க்ரஹம் மற்றும் சரணாகதி கத்யத்திற்கும் விளக்கவுரைகளை அருளிச் செய்தார். அம்மாள் சிலகாலம் கும்பகோணத்தில் எழுந்தருளியிருந்து, ஸ்ரீ கோமளவல்லி தாயார் சமேத ஸ்ரீ ஆராவமுதப் பெருமாளையும், ஸ்ரீ விஜயவல்லி, ஸ்ரீ ஸுதர்ஸனவல்லி சமேத ஸ்ரீ சக்கரபாணி பெருமாளையும் மங்களாசாசனம் செய்து பல ப்ரபந்தங்களை இயற்றியுள்ளார். திருகுடந்தை ஸ்ரீ சக்ரபாணி பெருமாளை பற்றி 'ஹேதிபுங்கஸ்தவம்' எனும் ஸ்லோகத்தை இயற்றியுள்ளார்.

ஸ்ரீ சக்கரத்தாழ்வாரின் மேல் இயற்றப்பட்ட முதல் க்ரந்தம் இதுவேயாகும். இந்த ஸ்துதியின் பலனாக கந்தாளன் எனும் பிராம்மணனை பிடித்திருந்த பிசாசு விலகியதாக சரித்திரம். 32வரிகளை கொண்ட இந்த ஸ்ரீ ஹேதிபுங்கஸ்தவம் தினமும் அனுசந்தானம் செய்தால் பல நல்ல பலன்களை, சக்தியை, தைரியத்தை அளிக்கவல்லது. (ஹேதி - ஆழி, சக்கரம்).

ஜய! ஹேதீச! லக்ஷ்மீச பாஹ்வலங்கார பூத! (1)

திருமாலின் கரத்துக்கு ஆபரணமாய்த் திகழும் ஆயுதங்களின் தலைவனே!

ஜய! தேஹி விஷ்ணுலோகம் ஏவம் விதே பக்திஹீநே! (32)

பக்தியில்லாத அடியேனுக்கும் ஸ்ரீ விஷ்ணு லோகத்தை அருள்வாயாக! உனக்கு ஜெயம் உண்டாகட்டும்!

பலஸ்ருதி ஸ்லோகம்

"ஸ்ரீ ஸுதர்சன ஸ்தோத்ரம் இதம் வரதார்யேண நிர்மிதம்।
படந் ஸித்யதி வை ஸத்யோ ந பயம் தஸ்ய ஹி க்வசித்॥"
(ஹேதிபுங்கஸ்தவம்)

(இந்தத் துதியைப் படிப்பவர்களுக்கு ஸ்ரீ சக்ரபாணிப் பெருமாள் அருளால், அனைத்து வெற்றிகளும் உண்டாகும்.)

தூப்புல் ஆசார்யன் ஸ்வாமி தேசிகனுக்கு ஐந்து வயதானவுடன் அக்ஷராப்யாசம் செய்த பின், அவர் மாமாவான அப்புள்ளார், குழந்தை வேங்கடநாதனை அவருடைய ஆசார்யன் ஸ்ரீ நடாதூர் அம்மாளின் காலக்ஷேபத்துக்கு அழைத்து சென்றார். அம்மாள் வாமனன் போன்ற தேஜஸுடன் இருந்த பால தேசிகனை பார்த்தவுடன் தன் காலக்ஷேபத்தை நிறுத்தினார். தன் ப்ரிய சிஷ்யன் அப்புள்ளாரின் சௌக்கியம் விசாரித்து பின் மீண்டும் காலக்ஷேபத்தை தொடர முற்பட்ட போது, அவரும் சிஷ்யர்களும் விட்ட இடம் தெரியாமல் யோசிக்க, அப்பொழுது பாலதேசிகன் விட்ட இடத்தின் அடியை எடுத்துக் கொடுக்க, அம்மாள் மிகவும் மகிழ்ந்து பரவசத்தில் பாலதேசிகனை மடியில் அமர்த்தி, அவர் மேதாவிலாஸத்தை பார்த்து"நம் ஸம்ப்ரதாயத்தில் வருங்காலத்தில் சித்தாந்தங்களை நிலைநிறுத்த போகும் மஹானாக விளங்க போகிறவன், என ஆசீர்வதித்து. இவருக்கு சகல உபதேசங்களையும் நீரே செய்ய வேண்டுமென அப்புள்ளாரிடம் அவருக்கு ஆசார்யனாக இருக்க கட்டளையிட்டார். தேசிக தர்ஸனத்துக்கு அதிபதியான ஸ்வாமி தேசிகனை கண்டெடுத்து ஸம்ப்ரதாயத்துக்கு அளித்த மஹான் ஆசார்யன் நடாதூர் அம்மாள்.

அம்மாள் இயற்றிய ஹேதிபுங்கஸ்தவம் போலவே ஸ்வாமி தேசிகனும் 32 முறை 'ஜய' சப்தம் வரும்படி ஶ்ரீ சக்கரத்தாழ்வாரை துதித்து ஶ்ரீ சுதர்ஸனாஷ்டகம் அருளினார் இன்றும் காஞ்சியில், வருடந்தோறும் புரட்டாசி ச்ரவணத்தில், வரதனை சேவிக்க வரும் ஸ்வாமி தேசிகன், முதலில் இந்த கச்சி வாய்த்தான் மண்டபத்தை சேவித்து, தனது ஆசார்யர்களை மானசீகமாக வணங்குகிறார். ஶ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்துக்கு கச்சி வரதன் அளித்த வரதகுரு ஶ்ரீ நடாதூர் அம்மாளை தியானித்து அவர் அருளிய ஶ்ரீ ஹேதிபுங்கஸ்தவம் அனுசந்தானம் செய்து, வேதாந்தகுரு ஸ்வாமி தேசிகன் அருளிய ஶ்ரீ ஸுதர்ஸனாஷ்டகம் மற்ற ஶ்ரீ ஸுக்திகளையும் அனுசந்தித்து அருள் பெறுவோம்!!

"சித்திரை சித்திரையில் அவதரித்தார் வாழியே"

"ஶ்ரீ நடாதூர் அம்மாள் திருவடிகள் என்றென்றும் வாழியே"

அடியேன் தாஸன்

சித்ரா அமுதன்

(Vadodara)

